மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டுர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டுர்
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.01/2021
அ.வ.எண்.131/2016

1. எஸ்.ராஜகோபால்
2. எஸ்.சிவானந்தம் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பி.பொன்னுசாமி
2. பி.செல்லப்பன்
3. பி.ராமசாமி
4. பி.மாணிக்கம்
5. பி.சிவபெருமாள்
6. பி.ஈஸ்வரி
7. பி.சிவராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 04.12.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1, 3, 4, 6, 7, 9 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கே.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 2, 5 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.குருசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மனுதாரர்கள் வழக்கு கோவிலின் பரம்பரை அறங்காவலர்கள் இல்லை என கூறியுள்ளனர். அதனை மனுதாரர்கள் மறுப்பதற்காக பதிலுரை தாக்கல் செய்துள்ளனர். எனவே இத்துடன் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை ஏற்று உத்தரவிட கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 4, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(இம்மனுவின் எதிருரை குறிப்பாணையின் பேரில் 2, 5ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மறுப்புரை ஏற்கத்தக்கவை அல்ல மற்றும் மறுப்புரையில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் தவறாகும். இம்மனுவை ஏற்றுக்கொள்ள எவ்வித நியாயமான காரணங்களும் மனுதாரர்கள் கூறவில்லை. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிலுரை 2017 பிப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வெகு காலம் கழித்து மறுப்புரையை ஏற்க கோரி ஏற்கனவே மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் இ.ம.எண்.786/2017ல் மனுதாக்கல் செய்து அம்மனுவும் 2018 மார்ச் மாதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மறுப்புரையில் புதிது புதிதாக இஷ்டம்போல் மனுதாரர்கள்/வாதிகள் பல்வேறு சங்கதிகளை கூறி தாக்கல் செய்திருந்தனர். தற்போது வழக்கு விசாரணைக்காக மீண்டும் வந்துள்ள நிலையில் மேற்படி விசாரணை நடவடிக்கைகளை நீட்டிப்பு செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். ஒரு பதிலுரைக்கு 2 முறை மறுப்புரை தாக்கல் செய்ய சட்டத்தில் இடம் இல்லை. இம்மனுவை அனுமதிக்க எவ்வித நியாயமான காரணமோ, முகாந்திரமோ எதுவும் கிடையாது. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மனுதாரர்கள் வழக்கு கோவிலின் பரம்பரை அறங்காவலர்கள்

இல்லை என கூறியுள்ளனர் எனவும், அதனை மனுதாரர்கள் மறுப்பதற்காக பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் எனவும், எனவே இத்துடன் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை ஏற்று உத்தரவிட கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மறுப்புரை ஏற்கத்தக்கவை அல்ல மற்றும் மறுப்புரையில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் தவறு எனவும், இம்மனுவை ஏற்றுக்கொள்ள எவ்வித நியாயமான காரணங்களும் மனுதாரர்கள் கூறவில்லை எனவும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிலுரை 2017 பிப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வெகு காலம் கழித்து மறுப்புரையை ஏற்க கோரி ஏற்கனவே மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் இ.ம.எண்.786/2017 ல் மனுதாக்கல் செய்து அம்மனுவும் 2018 மார்ச் மாதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும், அந்த மறுப்புரையில் புதிது புதிதாக இஷ்டம்போல் மனுதாரர்கள்/வாதிகள் பல்வேறு சங்கதிகளை கூறி தாக்கல் செய்திருந்தனர் எனவும், தற்போது வழக்கு விசாரணைக்காக மீண்டும் வந்துள்ள நிலையில் மேற்படி விசாரணை நடவடிக்கைகளை நீட்டிப்பு செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் எனவும், ஒரு பதிலுரைக்கு 2 முறை மறுப்புரை தாக்கல் செய்ய சட்டத்தில் இடம் இல்லை எனவும், இம்மனுவை அனுமதிக்க எவ்வித நியாயமான காரணமோ, முகாந்திரமோ எதுவும் கிடையாது எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/வாதிகள் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதற்காக கூடுதல் பதிலுரை தாக்கல் செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் ஏற்கனவே எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதற்காக இ.ம.எண்.786/2017 தாக்கல் செய்யப்பட்டு அம்மனு கடந்த 22.03.2018 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் அம்மனுவிலேயே தற்போது தாக்கல் செய்துள்ள பதிலுரை சங்கதிகளை கூறாமல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ததிலிருந்து

நான்கு ஆண்டுகள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் விசாரணை நீதிமன்றத்தில் தான் தரப்பினர்கள் தங்களுடைய சாட்டுரையை (Pleadings) முன்னிலைப்படுத்த முடியும் என்பதாலும், மனுதாரர்கள் தங்களுடைய வழக்கை நிரூபிக்க மறுப்புரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர்கள் 4 வருடங்கள் காலதாமதமாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/–செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/–யை செலவுத்தொகையாக 06.01.2022 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 07.01.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.